IMPACT FACTOR- 4.520 ISSN NO- 2456-7078

Volume-1, Issue-VI, Sept- 2017

# Research maGma

An International Multidisciplinary Journal

## CONFERENCE

of

Thiruvalluvar University
College of Arts & Science, Arakkonam.

on

## "EMERGING TRENDS IN ENGLISH LANGUAGE & LITERATURE"

Research maGma
An International Multidisciplinary Journal
ISSN NO- 2456-7078 IMPACT FACTOR- 4.520 VOLUME-1, ISSUE-7, SEPT-2017

# திருக்குறளில் மருதத்திணைக்கான கூறுகள

[1]முனைவர்.இரா.ஜெயந்தி மற்றும் [2]வீ.வாசுகி,
[1]உதவிப் பேராசிரியர மற்றும் தமிழத்துறைத் தலைவர் [2]ஆய்வியல் நிறைஞர்,
[1இ2]தமிழாய்வுத்துறை, ஸ்ரீ விஜய் வித்யாலயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்), தருமபுரி.

ஆய்வுச்சுருக்கம்:

இன்று தமிழிலுள்ள நூல்களிலேயே திருக்குறள்தான் இஉலகப்புகழ் பெற்ற நூலாக விளங்குகின்றது. பல ஆயிரக்கணக்கான ஆண்டிற்கு முன் தோன்றிய குறளிலுள்ள அறங்கள் இன்றும் பொறுத்தமாக உள்ளது. மேலும் மக்களனைவருக்கும் பொதுவாக செய்யப்பட்டதாகும். இதனால் உலகப்பொதுநூல் எனப்பட்டது.தமிழில் முதன்முதலில் தோன்றிய அறநூல் இதுவே.இதன் மாண்பினை அறிய இதற்கு அமைந்திருக்கும் சிறப்பு பெயர்களே போதும். அறம், பொருள், இன்பம் என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது. இதில் இன்பவியலில் இல்லறக்காதல் மற்றும் கடமைகள் என்னவென்று கூறமுற்படுகிறது.

ஆண்-பெண் ஒன்றுபட்ட உண்மையான உறவினால்தான் தனித்தனிக் குடும்பங்கள் தோன்றின. இல்வாழ்விலே இன்பமும், ஒழுக்கமும் வளரவே அற நெறியும், அரசியலும் வேண்டியிருந்தன. எனவே இன்பத்தைப் பற்றிக்கூறும் இயலை மூன்றாவது பகுதியாக வைத்துள்ளார் வள்ளுவர். இல்லற வாழ்வில் தலைவன்-தலைவிக்குமிடையே ஏற்படும் ஊடல் களவு,கற்பு குறித்து திருவள்ளுவர் எவ்வாறு கூறியுள்ளார் என்பதை குறித்துக் கண்டறிதலும்,.மேற்கண்ட கருத்துக்களனைத்தும் விளங்கும் நூலும், தமிழில் வேறு எதுவும் இல்லை. இங்கு மருதத்திணைக்கான கூறுகள் திருக்குறளில் எம்முறையில் காணலாகிறது என்பதைக் குறித்து ஆய்தலே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

மூல வார்த்தைகள்:

உலகப்பொதுநூல்இ அறங்கள்

## மருதம்

மருதம் என்பது செழுமையான வயலும் வயல் சார்ந்த பகுதியும் ஆகும். இதனைக் குறித்து புரட்சிதாசன்,

“செந்நெல் மருதம் செழிப்புக் களஞ்சியம்
கன்னல் உழவரைக் காப்பதற்கு-மன்னன்
மகிழ்நன் நிலச்சிறப்பை மாப்புலவர் போகி

அகவலில் பாடினார் அன்று” (தொல்-299-புரட்சிதாசன்) என்று குறிப்பிடுகிறார்.

பரந்த நிலப்பரப்புகளில், பசுமையான சோலைகள், நெற்கழனிகள்,

கரும்புத்தோட்டங்கள்,தாமரைக்குளம், இறைவாய்க்கேணிகள், பெரிய அணைக்கட்டுகள் கொண்ட கண்மாய்கள்,நீண்டுபடர்ந்து வளர்ந்த பூ உதிர்மரங்களும் உண்டு. இங்கு வாழும் உழவர்கள், நாகரிக வாழ்க்கையும் உழைப்பின் பயனையும் ஒன்றுபட்டு அடையும் ஐக்கிய உணர்வும் கொண்டவர்கள் மருத நிலக்குடி மக்கள்.

## மருதநிலக்கூறுகள்

அழகான வயலில் அருமையான நீர் நிரம்பி வழியும், கெண்டையும், கெழுத்தியும் துள்ளித்திரியும். இதனைக் கொத்தித் தின்ன நாரையும், நீர்க்கோழியும் மேய்ந்து திரியும். இங்கு ஆண்டுதோறும் உழவு செழுமையாக நடக்கும். உழவனும் உழத்தியரும் இத்தொழில் புரிவர். இங்கு விளையும் செந்நெல் வெண்ணெல் இவர்களுக்கு உணவாகும்.அழகான பூ உதிர் மரமான செங்கழுநீர் உண்டு. பொய்கையில் அழகான தாமரை மலர்ந்துள்ளன. அதில் தேன் பருக தேனீக்கள் ரீங்காரமிட்டுக்கொண்டு திரிகின்றன. குட்டையை குளப்பிக் கொண்டு சேரும் சகதியும் தன்மேல் பூசிக்கொண்டு எருமைகளும், நீர்நாய்களும் உள்ளன. மேலும் நன்மையை மட்டும் எடுத்துக்கொள்ளும் மாந்தர் போன்று நீரோடு கலந்திருப்பினும், பாலை மட்டும் பருகிக்கொள்ளும் அன்னமும் உண்டு. இந்நில மக்களிடம் காணப்படுவது ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். இவைகளே இந்நிலத்தின் உரிப்பொருள்களாகும்.இதனை,

“குருகுகொளக் குளித்த கெண்டையயல
துருகெழு தாமரை வான்முகை வெருஉம்
கழனியம் படப்பைக் காஞ்சி”(ஓரம்போகியார்-குறுந்-127)
என ஓரம்போகியார் இப்பாடல் மூலம் இயம்புகிறார்.

## களவு

களவு என்பது திருடுதல் எனப்பொருள். களவுதல்-மனதை அல்லது இதயத்தை களவாடல். ஒத்தஅன்புடைய தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுத் தமக்குள் அன்பு கொண்டு புணர்தல்.இதில் இருவரது செயலும் மறைமுகமாகவும், அறத்துடனும்,தோழியின் உதவியுடனும் செயல்படும். களவுக்காலத்தில் எதிர்பாராவிதமாக இருவரும் நோக்க நேரின் நேருக்கு- நேர் பார்க்க அஞ்சி கள்ளத்தனம் மட்டுமே வெளிப்படுத்துவர்.இதனை

“யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்”(குறள்-1094)
என்ற குறள் நவில்கின்றது. மேலும்,
“ஒருமித் தெதிர்ப்படல் ஒப்பித் தழுவிப்
பெறுதலில் காமப் பிணையல் -உறுதல்
இடந்தலை கொள்ளல் இதற்குத் துணையாய்
உடன்படல் என்ப மறை”(தொல்-புரட்சிதாசன்-170)

களவாவது பிறர்க்குரிய பொருள் மறையிற்கோடல், இன்னதன்றி ஒத்தார்க்கும்,மிக்கார்க்கும் பொதுவாகிய கன்னியரைத் தமர் கொடப்பக் கொள்ளாது கன்னியரை தம் இச்சையினால் தமரை மறைத்தல், புணர்ந்து பின்னும் அறநிலை வழுவாமல் நிற்றலால்,இது அறமெனப்படும்.என்பார் இளம்பூரணர்.
மேலும் தொல்காப்பியரும் ,

“காமப் புணர்ச்சியும் இடந்தலைப்படலும்
பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
றாங்க நால் வகையினும் அடைந்த சார்வொடு
மறைஎன மொழிதல்”(தொல்-பொருள்-செய்யுள்-487) என்று உரைக்கின்றார்.

ஒத்தார் இருவர் தாமே கூடும் கூட்டம் (காமப்புணர்ச்சி) இயற்கைப்புணர்ச்சி: புணர்ந்த தலைவன் பிற்றை ஞான்றும் அவ்விடத்துச் சென்று எதிர்ப்படல் (இடந்தலைப்பாடு):இப்புணர்ச்சி பாங்கற்கு உரைத்து, நீ எமக்குத் துணையாக வேண்டுமென்ற அவன் குறிவழிச் சென்று தலைமகள் நின்ற நிலையை உணர்த்தச் சென்று கூடுதல்(பாங்கற்கூட்டம்) இவற்றின் பின்னர் இக்கூட்டம் நீடச்சேறல் வேண்டித்தோழியை இரந்து, பின்னின்று அவள் வாயிலாகக் கூடுதல் (தோழியிற்கூட்டம்),என்பார் இளம்பூரணர். இந்நான்கும் மறைபொருள்.

### ஊடல்

களவுக்காலத்தில் காதலரிடையே ஏற்படும் செல்லக்கோபம்.தான் குறித்த காலத்தில் தலைவன் வராமையைக் கண்டு தலைவி ஊடுகிறாள். ஊடல் கொண்ட தலைவியின் நிலைகள் தனது கன்னம் சிறுத்து, இடை மெலிந்து உடல் இளைத்து,மேனி வனப்பும் குறைந்துவிட்டது. உணவு, உறக்கம், மற்றும் உலகையே வெறுக்கிறாள். அதே சமயம் தலைவனோ, ஒருபடி உயர்ந்து மடலேறவும் துணிகிறான். தன் காதலியின் அன்பைப் பெற முடியாத நான் வாழ்வது எதற்கு என விம்முகிறான்.

இந்நேரத்தில் இருவரும் எதிர்நோக்க நேருமின் தம் காதலை வெளிப்படுத்தாமல் நோக்குவர். இதில் அறத்தோடு நிற்றலும் அடங்கும். தமது காதலையும், ஊடலையும் அயலவர் காண வெளிப்படுத்தாமை.காணமுடிகிறது இதனை வள்ளுவரும்,

“ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள”(குறள்-1099) என மொழிகிறார்.

### குறிப்பு

ஊடல் கொண்ட தலைவியைக் குறித்து தலைவன் தன் மனதோடு, நெஞ்சே! என்னை நேராக நோக்கினால் நான் அகமகிழ்வேன் என நினைந்து, ஒரு கண்ணைச் சுருக்கினவள் போல் பார்த்துத் தனக்குள் மகிழ்ந்து கொள்வாள். இதன் மூலம் அவளுக்கு ஏக மகிழ்ச்சி. பொறுத்திரு நெஞ்சே! இக்காலம் நீடிக்காது, தலைவி மனம்மாறி என்னையேற்கும் காலம் விரைவில் கைகூடிவரும் என தலைவியின் குறிப்பு மொழியைக் கூறி நெஞ்சோடு ஆற்றியிருக்கிறான்.இதனை,

“குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்”(குறள்-1095)
என்று வள்ளுவமும் விளக்குகின்றது.

### அலர்

காதல் கொண்ட மங்கை, தான் மணக்கும் மணாளனைக் கண்டது ஒரே நாள் தான். ஆனால் அதனாலுண்டான அலரோ, வானத்திலுள்ள நிலவினை பாம்பு விழுங்கினால் செய்தி எப்படி பரவுமோ அவ்வாறு காட்டுத்தீ போல் எங்கும் பரவி விட்டது.எனவே என் ஊடலை தீர்க்கவேண்டுமென நினைத்தால் விரைந்து என்னை மணப்பாயாக, என தன் காதலனிடம் கூறுவதாக நினைத்து தானே மனதோடு புலம்புகிறாள்.

“கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று” (குறள்-1146)

மருத நிலத்தலைவன் அழகிய நெற்றியையுடைய பொதுமகளைத் தழுவிய தன் அழகிய மார்பினால் என்னையும் தழுவ வருகின்றான். அவனுடைய செயல் நாட்டுப்புறத்தான் ஒருவன் தாழ்ந்த தரமுடைய கருங்கொள்ளையும், உயர்ந்த தரமுடைய செங்கொள்ளையும் சமமாகக் கருதி ஒரு பணத்திற்கு ஆறுமரக்கால் வீதம் அவ்விரண்டையும் விலைக்கு வாங்குதல் போல, அறியாமையுடையது எனத் தலைவனோடு ஊடிய தலைவி தன் நெஞ்சிடம் கூறுகிறாள்.இதை

"கருங்கொள்ளுந் செங்கொள்ளுந் தூணிப் பதக்கென்று
ஒருங்கொப்பக் கொண்டானாம் ஊரன் ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடாது
என்னையுந் தோய வரும்" (நாலடியார் -387)
என நாலடியார் பாடலும் உரைக்கின்றது

## புணர்தல்

ஊடலுக்கான காரணங்களைக் கண்டறிந்து இருவரும் மனம்விட்டுப் பேசி உள்ளத்தால் ஒன்றுபடல் வேண்டும். இதற்கு தோழி துணைபுரிவாள் . இருவரின் நிலையும் (சூழலையும்) தோழியிடம் எடுத்துக்கூறுவர்.பின் ஒருமனதாக உள்ளத்தால் ஒன்றுபடுவர். பின்பு இருவரின் வீட்டிலும் தத்தமது நிலைகளைக் கூறி,கற்பு வாழ்விற்கு தம் களவு வாழ்க்கையை முன்னேற்றுவர்.

"ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார்ப் பெற்ற பயன்"(குறள்-1109)

ஊடுதல், ஊடலை உணர்ந்து தெளிவித்தல், பின் கூடிப்புணர்தல் ஆகிய இவைகள் காதலால் பிணைக்கப்பட்டவர் பெற்ற பயன்களாகும்.

## கற்பு

கற்பு இருவருக்கும் பொதுவானது. கற்புடைய பெண் என்பவள் மகாலட்சுமி போன்ற அழகும், அன்பும், ஒழுக்கமும், தன் தலைவனுக்கு கட்டுப்பட்டவளாகவும், உயிரைவிட மானத்தை பெரிதாக மதிப்பவளாகவும் நற்குணங்களே உருவமாகவும் விளங்குவாள். இல்லறத்தில் அறத்தொடு நின்று தான-தரும காரியங்கள் புரிந்து தன் கொழுநனுக்கு பெருமை சேர்ப்பவளாக விளங்குவாள். அடக்கமுடன தன் இல்லானுடன் இன்பம் துய்த்து, கணவனையே கண்கண்டதெய்வம் என வாழ்வாள். இதனைக் குறளும்

"உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரல்நசைஇ இன்னும் உளேன்"(குறள்-1263)

என்று நவில்கின்றது. அதுமட்டுமின்றி உலகமே போற்றி வணங்கும் வள்ளுவனின் மனைவி வாசுகியின் கற்புத்திறனுக்கு உதாரணம் "கொக்கென நினைத்தாயோ கொங்கணவா" மேலும் "கண்ணகி மதுரையை எரித்து" கற்புத்திறத்தினால் உயர்ந்தவரது வாய்ச்சொல்லும் பலிக்கும். இவ்வரிசையில் சீதை,தமயந்தி, அனுசுயை, நளாயினி,அருந்ததி இன்னும் ஏராளமானோரும் உண்டு. அதனை உணர்த்த ஒன்றிரண்டு துளிகள் இங்கே,

"முக்கணர்தண் மலைநாட்டிற் கற்புடைமங்
கையர்மகிமை மொழியப் போமோ?
ஒக்கும்எரி குளிரவைத்தாள் ஒருத்தி வில்வே
டனையெரித்தாள் ஒருத்தி மூவர்
பக்கம் உற அமுதமளித்தாள் ஒருத்திஎழு
பரிதடுத்தால் ஒருத்தி பண்டு
கொக்கெனவே நினைத்தனையோ கொங்கணவா
என்றொருத்தி கூறி னாளே-தண்டலையார் சதகம்-6 (பிற்கால நீதி இலக்கிய வரலாறு)
கற்பின் திறத்தை இப்பாடல் சிறப்பாக படம் பிடித்துக் காட்டுகிறது.

## மழை

மண்ணிலுள்ள உயிர்களெல்லாம் வானத்தை எதிர்நோக்கியே வாழ்கின்றன. வானிலிருந்து பொழியும் மழையானது மண்ணுயிர்க்கெல்லாம் பிரதிபலன் பாராமல் வாழ்வு

கொடுப்பதைப் போல, தலைவி தன் கற்புத்திறத்தால் தலைவனையே உள்ளத்திலும், உணர்விலும் நினைந்து காதல், ஊடல் திறத்தால் தன் இனத்தினைத் தக்க செயல்களால் காத்து நிற்றலே தலைவியின் கற்பு ஒழுக்கம். இத்தகைய தன்மையுடன் கூடிய தலைவியைத் தன்னையே தந்து காத்தலே தலைவனின் கடமையாகும்.இதனை நவிலும் திருக்குறள்,

"வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு
வீழ்வார் அளிக்கும் அளி"(குறள்-1192)

தம்மை விரும்பும் காதலிக்கு, தக்க சமயத்தில் காதலன் செய்யும் அன்பு, உயிர் வாழ்கின்றவர்க்கு மேகம் அளவறிந்து மழை பெய்து காப்பதைப் போன்றதாகும்.

## மென்மை

பார்வைக்கு இனிய இயற்கை அழகுடையவளும், தலைவனின் விருப்பப்படி செயற்கை அழகு செய்து கொள்பவளும், கற்பால் மற்றவர்கள் மதிக்கவும்,தன் இல்லறக்கடமைகளால் ஊர்மக்களே வியக்கும்படியாய் இருப்பவளும், தன் தலைவனின் மதிப்புணர்ந்தும் தனது மென்மையான பண்பு ஒளிரும் தன்மை கொண்டவள் தலைவி என்பதை,

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்
உட்குடையாள் ஊர்தான் இயல்பினாள் உட்கி
இடனறிந் தூடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்" (நாலடியார்-384)

இப்பாடல் மூலம் உணரமுடிகின்றது. அதுமட்டுமின்றி காமத்தையும், பெண்ணையும் மலரைவிட மென்மையானது எனவும், இதனை மிக மென்மையாக கையாள வேண்டும் என வள்ளுவம்

"மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்விதலைப்படு வார்" (குறள்-1289)
என்று அழகாக எடுத்தியம்புகின்றது.

## முடிவுரை

வள்ளுவர் இயற்றிய இன்பத்துப்பால் களவு-கற்பு ஆகியவற்றை தன்னகத்தே கொண்டு விளங்குகிறது. இதில் மருதத்திணையின் கூறுகள் காணப்படுகிறது. செழுமையான பகுதியாக விளங்கும் மருதநிலமானது இயற்கை அளித்த கொடை. இங்கு உழவு செய்யும் உழவன்-உழத்தியரிடையே காணும் களவு-கற்பு-ஊடல் எங்ஙனம் நிகழ்கிறது என அறியமுடிகிறது.சங்க இலக்கியத்தில் காணப்படும் அத்தனை கருப்பொருட்களும் திருக்குறளில் நிறைந்துள்ளதை இக்கட்டுரை விளக்குவனவாக அமைந்துள்ளது.

## துணைநூற் பட்டியல்:

1. பரிமேலழகர்இ திருக்குறள் முலமும் உரையும் இ அருனா பப்ளிகேசன்ஸ்இ சென்னை 2015
2. பாவலரேறு ச பாலசுந்தரம் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆராச்சிக்கண்டிகையுரை பொருளதிகாரம் செய்யுளில் - மரபியல் பெரியார் பல்கலைக்கழகம் 2012
3. பேராசிரியர் முனைவர் இரா பிரேமா சங்க இலக்கியம் குறுந்தொகை முலமும் உரையும் வர்த்தமானன் பதிப்பகம் சென்னை 1999.
4. டாக்டர்.கதிர்முருகு பிற்கால நீதி இலக்கிய வரலாறு நாம் தமிழர் பதிப்பகம் சென்னை 2010.
5. எஸ்.கௌமாரீஸ்வரி நாலடியார் முலமும் உரையும் சாரதா பதிப்பகம் சென்னை 2006.